### தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில்

# மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழா!

## சென்னை – மெரினாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!





**சென்னை, டிச.22**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2024) சென்னை, மெரினா கடற்கரையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழாவை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் சுய உதவிக்குழுவினர் தயாரித்த தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த புகழ் வாய்ந்த உணவு வகைகளை ருசி பார்த்தார். மேலும் மகளிர் சுய உதவிக்குழுக்களுடன் சேர்ந்து பிரமாண்டமான கேக் தயாரிப்பில்பல்வேறுமூலப்பொருட்களை கலக்கும் பணியில் ஈடுபட்டார்.**

**மகளிர் சுய உதவிக்குழுக்கள்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்கள் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்பதற்காக 1989-ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களை தொடங்கி வைத்தார். அன்று அவர் தொடங்கிய மகளிர் சுய உதவிக்குழுக்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்த போது அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் சென்று தனது கரங்களால் ஆயிரக்கணக்கான மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி சேமிப்பு புத்தகம் மற்றும் கடனுதவிகளை வழங்கினார். அதுவரை பெண்கள் வங்கிகளுக்கு சென்று தங்கள் தேவைகளை கேட்க தயங்கிய நிலை மாறி, தற்போது பெரும்பாலான வங்கிகளின் முக்கியமான மற்றும் மரியாதைக்குரிய வாடிக்கையாளர்களாக மகளிர் சுய உதவிக்குழுவினர் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேலும் வளப்படுத்தும் நோக்கத்துடன் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் துணை முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட, மதி அனுபவ அங்காடி, மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி அங்காடி, மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம், இயற்கைச் சந்தைகள் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் என பல்வேறு செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதன் வாயிலாக இன்று சுய உதவிக் குழுக்கள் பொருளாதார சுய சார்பு பெற்று வருகின்றனர்.

மிகப்பெரிய உணவகங்களில் சமைக்கப்படும் எவ்வளவு உயர்ந்த உணவு என்றாலும், வீட்டில் பெண்களின் கைப்பக்குவத்தில் சமைக்கப்படும் உணவு வகைகளுக்கு ருசியிலும், தரத்திலும் ஈடுசெய்ய முடியாது. அத்தகைய பெண்கள் இணைந்த மகளிர் சுய உதவிக்குழுவினர் தயாரித்த உணவுப் பொருட்கள் மற்றும் உணவு வகைகளை அனைவரும் அறிந்திட வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், சென்னை மெரினா கடற்கரையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் உணவுப் பொருட்களின் உணவுத் திருவிழா நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிறப்பு வாய்ந்த தஞ்சாவூர் பருப்பு உருண்டை குழம்பு, மதுரை கறி தோசை, விருதுநகர் கரண்டி ஆம்லெட், திருச்சி நவதானிய புட்டு, மயிலாடுதுறை இறால் வடை, நாகப்பட்டிணம் மசாலா பணியாரம், நீலகிரி ராகி களி அவரை குழம்பு, ராணிப்பேட்டை ஆற்காடு பிரியாணி, வேலூர் ராகி கொழுக்கட்டை, நாமக்கல் பள்ளிப்பாளையம் சிக்கன், தருமபுரி ரவா கஜூர் உள்ளிட்ட 286 வகையான சைவ மற்றும் அசைவ உணவு வகைகளை, 65 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட மகளிர் உடனடியாக சமைத்து, சுகாதாரமான முறையில் பரிமாறும் வகையில் 35 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**ஏழு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன!**

ஆயத்த உணவு வகைகளான ஸ்ரீவில்லிப்புத்தூர் பால்கோவா, திருநெல்வேலி அல்வா, திருச்சி மணப்பாறை முறுக்கு, தூத்துக்குடி உடன்குடி கருப்பட்டி, நீலகிரி ஸ்ட்ராபெர்ரி ப்ளூபெர்ரி, அரியலூர் வறுத்த முந்திரி, செங்கல்பட்டு நாட்டுச்சர்க்கரை எள்ளுருண்டை, சென்னை வேர்க்கடலை நெய் லட்டு, கருப்பு கவுனி அரிசி லட்டு, கடலூர் சங்குப்பூ சர்பத், தருமபுரி குதிரைவாலி ரோஸ் லட்டு, திண்டுக்கல் காரா பூந்தி, காஞ்சிபுரம் முட்டை மிட்டாய், தென்காசி தேன் நெல்லி, திருவண்ணாமலை சிமிலி உள்ளிட்ட 520 ஆயத்த உணவுப் பொருட்களை, உணவுத் தரச் சான்றிதழ் (FSSAI) பெற்ற குழுக்களைச்சேர்ந்த 365 மகளிர் சுகாதாரமான முறையிலும், கலப்படம் ஏதுமின்றியும் தயாரித்து, தகுந்த முறையில் கட்டுமானம் (Packaging) செய்து விற்பனை செய்திட 7 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் 3 அரங்குகளில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட 45 வகையான பொருட்கள் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பாரம்பரிய நடன நிகழ்ச்சிகள்!**

இந்த உணவுத் திருவிழா, 21.12.2024 முதல் 24.12.2024 வரை மதியம் 12.30 மணி முதல் இரவு 08.30 மணி வரை நடைபெறும். உணவுத்திருவிழாவில் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் குடும்பத்தின ருடன் வருகை தருவதற்காக மாலை நேரங்களில் தப்பாட்டம், கரகாட்டம், மயிலாட்டம், புலியாட்டம், மாடாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், தெருக்கூத்து, பரதநாட்டியம், கருப்பசாமி ஆட்டம், கும்மிப்பாட்டு போன்ற பாரம்பரிய நடன நிகழ்ச்சிகள், தமிழர்களின் பாரம்பரிய இசைக் கருவிகளான தவில், நாதஸ்வரம், ராஜ மேளம், நையாண்டி மேளம் போன்றவற்றின் இசை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உணவுத் திருவிழா நடைபெறும் நாட்களில் மாலை நேரங்களில் உணவு வகைகளின் தரத்தை மேம்படுத்துவது, விற்பனை நுணுக்கங் கள், சந்தைப்படுத்துதலில் உள்ள சவால்களை எவ்வாறு களைவது போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளன.

உணவுத் திருவிழாவிற்கு வருகை தரும் பொதுமக்கள், லேடி விலிங்டன் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் இராணி மேரி கல்லூரி ஆகிய கல்லூரிகளின் வளாகங்களில் இலவசமாக வாகனங்களை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், எஸ்.சுதர்சனம், தாயகம் கவி, ஆர்.டி.சேகர், த.வேலு, ஆ.வெற்றி அழகன், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, ஜோசப் சாமுவேல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் எம்.மகேஷ்குமார், நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத்தலைவர் எஸ்.மதன் மோகன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டனர்.

# திராவிட மாடல் முதல்வர்தான் எட்டாம் வள்ளல்!



மாமன்னர் ஸ்டாலின் இங்கு ஆட்சி செய்கிறார்
தமிழ்நாட்டு மக்களுக்கு விடியல் தருகிறார்
மன்னராட்சி இல்லை ! இது மாமன்னர் ஆட்சி
செந்தமிழன் ஸ்டாலின் ஆட்சி என்று சொல்லுவோம் !

குடிசைவீட்டில் கும்பிகாய்ந்து கிடந்த மக்களைக்
காரைவீட்டில் குடியேற வைப்பவர் யாரு?
கஞ்சித்தண்ணி குடிப்பதற்கே வழியில்லாதோர்க்கும்
மூணுவேளை அரிசிச்சோறு தருபவர் யாரு?

தொலைவில் நின்று கோபுரத்தைக் கும்பிட்டோரை
அர்ச்சகராய்க் கோயிலுக்குள் அழைப்பவர் யாரு?
சாதிஇல்லா சமதர்மக் குடியிருப்பென்று
சமத்துவபுரம் சமூகநீதி காப்பவர் யாரு?

ஆம்புலன்ஸ் சேவைகளை இலவசம்ஆக்கி
எளியோரின் பதைபதைப்பைக் குறைப்பவர்யாரு
இன்னுயிரைக் காப்போம்என உயிர்காக்கின்ற
மருத்துவக்காப் பீடுதிட்டம் கொடுப்பவர்யாரு

மாற்றுத் திறனாளிக்கும் இடஒதுக்கீடு
திருநங்கைப் பெண்களுக்கும் இடஒதுக்கீடு
தமிழ்வழியில் படித்தோர்க்கும் இடஒதுக்கீடு
இல்லந்தேடிக் கல்விஅள்ளிக் கொடுப்பவர்யாரு?

அடுப்படியில் முடங்கிய நம்தாய்மார்க் கெல்லாம்
பேருந்து விடியல் பயணம் தருபவர்யாரு?
அஞ்சும் பத்தும் இல்லாத மகளிர் கணக்கிலே
ஆயிரமாம் உரிமைத் தொகை விடுப்பவர்யாரு?

விதவைஎன்று கண்ணீர்விட்ட பெண்களுக் கெல்லாம்
முன்னேற்றத் திட்டங்கள் கொடுப்பவர் யாரு?
மகளிர்சுய உதவிக்குழு அரியணையோடு
வருமானச் செங்கோலும் தருபவர் யாரு?

இருமொழிதான் நமதுகொள்கை என்று போராடித்
தமிழர்களை உலகில் வெல்ல வைப்பவர் யாரு?
பொட்டைப்புள்ள ஆனாலும் குடும்பச் சொத்திலே
சொத்துரிமை உண்டுஎன்று சொல்பவர் யாரு?

புதுமைப்பெண் தமிழ்ப்புதல்வன் தோழிவிடுதி
தொழில் முனைவோர் மானியங்கள் கலைஞர் நூலகம்
கோயில்களில் குடமுழுக்கு சமச்சீர் கல்வி
உழவர்சந்தை சாதனைகள் செய்பவர் யாரு?

சேரசோழ பாண்டியரின் ஆட்சி என்று
வரலாறு படித்ததுண்டு திராவிட மாடல்
முதல்வர்ஆட்சி மாமன்னர் ஆட்சி என்போம்
எல்லோர்க்கும் எல்லாம்தரும் மாட்சி என்போம்

தமிழ்ஏழு வள்ளல்கதை இலக்கியம் சொல்லும்
திராவிட முதல்வர்தான் எட்டாம் வள்ளல்
மாமன்னர் ஸ்டாலின் ஆட்சி என்றும் வெல்லும்
எப்போதும் தி.மு.க.தான் உலகை ஆளும்!



**கவிஞர் திருமதி. ஆண்டாள் பிரியதர்ஷினி**
தி.மு.க. தலைமைக் கழக செய்தித் தொடர்பு துணைத் தலைவர்

# பா.ஜ.க.வின் இழிவான அரசியல் இந்தியாவை அழிக்கும்!

## ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் எச்சரிக்கை!

சென்னை, டிச. 22 -

பா.ஜ.க. அரசு மற்றும் பிரதமர் மோடியின் இழிவான நடவடிக்கை முறை இந்தியாவை அழிவுப் பாதைக்குத்தான் இட்டுச் செல்லும் என்று நாடாளுமன்ற நடவடிக்கை குறித்து ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

அது வருமாறு:

சட்டமேதை அம்பேத்கரை இழிவுபடுத்திய அமித் ஷாவுக்கு எதிராகவும், பாஜக அரசுக்கு எதிராகவும் இப்படி ஒரு எதிர்ப்பு எழும் என்று அக்கட்சி எதிர்பார்க்கவில்லை. இன்று மாட்டிக் கொண்டவுடன் பிரச்சினையை திசை திருப்ப புதிய நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர். அதற்கு அக்கட்சி தேர்வுசெய்துள்ள இடம் நாடாளுமன்ற வளாகம்.

பொதுவாக நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க் கட்சிகள் போராட்டம் நடத்துவது வழக்கம். இது காலம் காலமாக நடந்து வருகிறது. இதுவரை கைகலப்பு நடந்தது இல்லை. காரணம், யாருக்கும் இடையூறு ஏற்படுத்தாமல் போராட்டம் நடைபெறும்.

ஆனால் வியாழக்கிழமை எதிர்கட்சி யினர் போராட்டம் நடத்திய பின்னர் அவைக்குச் செல்ல முயன்றனர். நாடாளுமன்றத்தில் பிரதான நுழைவாயில் முன்பு ஆளும் பாஜகவினர் திட்ட மிட்டு போட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதுவும் நுழைவாயிலை மறித்து நடத்தினர்; மக்களவை எதிர்க் கட்சித்தலைவர் ராகுல்காந்தி மற்றும் அக்கட்சியின் இதர உறுப்பினர்கள் உள்ளே சென்றபோது அவர்கள் வழிவிட்டிருக்க வேண்டும். வழிவிடாமல் அவரை தள்ளிவிட்டுள்ளனர்.



தீக்கதிர்

2024 டிச.21 சனிக்கிழமை

மலிவான – இழிவான அரசியல்

சட்டமேதை அம்பேத்கரை இழிவுபடுத்திய அமித் ஷாவுக்கு எதிராகவும், பாஜக அரசுக்கு எதிராகவும் இப்படி ஒரு எதிர்ப்பு எழும் என்று அக்கட்சி எதிர்பார்க்கவில்லை. இன்று மாட்டிக் கொண்டவுடன் பிரச்சனையை திசைதிருப்ப புதிய நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர். அதற்கு அக் கட்சி தேர்வுசெய்துள்ள இடம் நாடாளுமன்ற வளாகம்.

பொதுவாக நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க் கட்சிகள் போராட்டம் நடத்துவது வழக்கம். இது காலம் காலமாக நடந்து வருகிறது. இதுவரை கைகலப்பு நடந்தது இல்லை. காரணம், யாருக்கும் இடையூறு ஏற்படுத்தாமல் போராட்டம் நடை பெறும். ஆனால் வியாழக்கிழமை எதிர்கட்சி யினர் போராட்டம் நடத்திய பின்னர் அவைக்குச்

இதை மறைத்து, ராகுல் காந்தி தள்ளிவிட்ட தால்தான் பாஜக உறுப்பினர் சாரங்கி தலையில் காயமடைந்தார் என்று பொய் பேசுகிறார்கள். அம்பேத்கர் விஷயத்தில் நாடு முழுவதும் எழுந்த கண்டனத்தை எதிர்கொள்ள முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் பாஜக, திட்டமிட்டு இந்த நாடகத்தை நடத்தியுள்ளது வெளிப்படையாக தெரி கிறது. பாஜக மூத்த உறுப்பினரை ராகுல் தள்ளி விட்டிருந்தால் அது அங்குள்ள கண்காணிப்பு கேமிராவில் பதிவாகியிருக்கும். அதை வெளி யிட நாடாளுமன்றச் செயலகம் மறுக்கிறது.

ஒருவேளை ராகுல்காந்தி தள்ளியதைப் போன்று காட்சிகளை டிபேக் தொழில்நுட்பத்தில் போலியாக உருவாக்க முயற்சிக்கிறார்களோ என்னவோ? நாடாளுமன்றத்தை கலவர மன்ற மாக மாற்ற பா.ஜ.க.வினர் முயற்சிக்கிறார்கள். ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜிஜூவின் சமூக வலைதளப் பதிவு அதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. எதிர்க்கட்சித் தலைவர், பாஜக பெண் உறுப்பினர்களிடம் முறைகேடாக நடந்து கொண்டார் என்று அபாண்டமான குற்றச் சாட்டை அவர் கூறியி ருப்பதோடு பதிலுக்கு பதில் அடித்திருந்தால் என்னவாகியிருக்கும் என்றும் வன்முறையைத் தூண்டியுள்ளார். மக்களவைத் தேர்தலில் அறுதி பெரும்பான்மையை பெறமுடியாத நிலைக்கு சென்ற பாஜகவுக்கு வலுவான எதிர்க்கட்சிகளால் அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனால் பொய்யான குற்றச்சாட்டுகளின் கீழ் எதிர்க் கட்சித் தலைவர் மீது வழக்குப் பதிவு செய்து சிறையில் தள்ளி அவரது செயல்பாடு களை முடக்க முயற்சிக்கிறது.

வலுவான ஜனநாயகத்திற்கு அரசும் எதிர்க் கட்சிகளும் அவசியம் என்பதைக் கூட ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை அவர்கள் பெறவில்லை. பாஜகவின் இத்தகைய இழிவான அரசியல் நடைமுறை, இந்தியாவை அழிவுப்பாதைக்கு தான் இட்டுச் செல்லும்.

இவ்வாறு ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



சிவகங்கை சட்டமன்றத் தொகுதி அளவிலான இளைஞரணி பாகமுகவர்களுக்கான வலைதள பயிற்சி முகாமிற்கு தலைமை வகித்த மாவட்டக் கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் உட்பட பங்கேற்ற பாகமுகவர்கள், மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டி.டி. தணிகாசலம்
## டிசம்பர் 22 (2009)



**குன்றத்தூரில் கழகம் வளரப் பாடுபட்ட செயல்வீரர்களில் இவரும் ஒருவர்.**

**1950ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசு விதித்த 144 தடை உத்தரவை மீறி பேச்சுரிமை, எழுத்துரிமை காக்க கூட்டம் நடத்தியதையொட்டி காவல்துறை இவரைக் கைது செய்தது.**

**கழகம் அறிவித்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்த்து போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**